சிலபல இடங்களில் அவர்கள் வேலைவாய்ப்பு பெறும்முறையில் அவர்களை எடுத்துக்கொள்வதற்கான முயற்சியும் மேற்கொள்ளப் படும்.

Orthopaedic Departments

* 6 Q.—THIRU N. K. PALANISWAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to set up Orthopaedic Departments in all the District Head Quarters Hospitals; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) நாகர்கோவில், நாகப் பட்டினம், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களைத் தவிர ஏனைய மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் அனைத்திலும் முடவியல் மருத்துவப் பிரிவுகள் தற்போது உள்ளன. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும், முடவியல் மருத்துவத் துறைகள் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் எல்லா மாவட்டங்களிலும் படிப்படியான திட்டத்தின் கீழ் புறநோயாளிகளுக்கான முடவியல் மருத்துவத் துறைகள் மட்டும் திறக்கும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது.

(இ) முதற்கண் 1972-73-ல் சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர் ஆகிய இடங்களில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனை களில் புறநோயாளிகளுக்கான முடவியல் மருத்துவத்துறைகள் திறக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : ஆர்தோபிடிக் டிப்பார்ட் மென்டில் ஃபிஸியோதெராபி முக்கிய பங்கு வகிக்கிறது. இளம் பிள்ளை வாதம், முடக்குவாதம் இவற்றிற்கு இந்த ஃபிஸியோ தெராபி மிகவும் அவசியமாக இருப்பதால்—கோவை ஜில்லாவில் ஒரே ஒரு ஃபிஸியோதெராபிஸ்ட்தான் ஆர்தோபிடிக் டிபார்ட் மென்டில் இருக்கிறார். ஆகவே, அம்மாதிரியான ஸ்டாப்களை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : இந்த மருத்துவத் துறையில் வசதிகள் பலவும், தனித்தனியாக சிறப்புதுறைகளை எப்படி எப்படி ஏற்படுத்த வேண்டும் என்பதுபற்றி அந்தத் துறையைச் சார்ந்த நிபுணர்கள் ஆராய்ந்து படிப்படியாக

1972 டிசம்பர் 2]

ஏற்படுத்த திட்டம் தந்திருக்கிறார்கள். அவை சில ஆண்டுகளில் ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனைக்கும் ஏற்படுத்தப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நாகர்கோவிலில் இருக்கிற தலைமை மருத்துவமனையில் இந்த ஆர்த்தோபிடிக் சிகிச்சை முறை சரியான முறையில் இயங்கவில்லை. ஆதலால் அந்த இடத்திற்கு முதன்மை ஸ்தானம் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இன்னும் ஐந்தாறு மாவட்ட மருத்துவமனைகளிலும் இல்லை. அவற்றில் இந்த ஆண்டு மூன்று எடுத்துக்கொள்ளப்பட்டு மீதி பிறகு எடுத்துக்கொள்ளப் படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : எல்லா மாவட்டங்களிலும் இந்த ஆர்த்தோபிடிக் பிரிவுகள் திறப்பதற்கு எவ்வளவு ஆண்டு களாகும்? உடனடியாக துரிதமாக திறக்க என்னென்ன முட்டுக் கட்டைகள் இருக்கின்றன என்பதை அரசு ஆராய்ந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுபோல் ஒவ்வொரு துறையிலும் அதன் முக்கியத்துவம் வற்புறுத்தப்படுகிறது. மக்கள் வேண்டுகிறார்கள். நிதிநிலைமை எல்லாவற்றையும் ஒரேகாலத்தில் விரிவுப்படுத்த இடம் தாராது. நிபுணர்களும் கிடைக்கமாட்டார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நிதிநிலைமை இடம் தாவில்லை யென்றால் நிதி குவிந்தோர் பக்கத்தில் சென்றாவது இதற்கு வசதி தேட—அரசாங்கத்தினிடம் நிதி இல்லையென்றால் தனி நபர்களிடம், அவர்கள் இந்த நல்ல காரியத்திற்கு உதவி செய்ய முன்வருவார்களானால் அந்த நிதியைப் பயன்படுத்திக்கொள்ள ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறீர்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பல்வேறு கட்டடங்களில் அப்படிப்பட்ட வேண்டுகோள்கள் விடப்பட்டிருக்கின்றன. செல் வாக்கு பெற்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்களானால் நிதி கிடைக்கும் என்று நம்புகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : ஆர்தோபீடிக் டிப்பார்ட்மென்ட் திறக்க காலதாமதமானாலும் சித்த மருத்துவத்துறையில் எலும்பு முறிவு

கட்டும் திறமைவாய்ந்த மருத்துவர்கள் பலர் இருப்பதால் சித்த மருத்துவத்துறையில் எலும்பு முறிவு சிகிச்சை பிரிவு எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் திறக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது முடியுமா என்பது பரிசீலிக்கப்பட வேண்டும்.

Identity cards for medical attendance

*7 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the pensioners entitled to medical benefits have been supplied with pass books; and

(*b*) if not, the reasons for the delay?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு இலவச மருத்துவ வசதி பெறுவதற்காக அடையாளச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் அடையாளச் சீட்டு பெருத ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு, இலவச மருத்துவ வசதிக்கான அடையாளச்சீட்டு வழங்கப்படுவதைக் குறித்து தெளிவான விளம்பரப் பலகையொன்று எல்லா கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும், சென்னையிலுள்ள சம்பளக் கணக்கு அலுவலகத்திலும் வைக்குமாறு கருவூலக் கணக்கு இயக்குநர், கருவூலக அதிகாரிகளையும், துணைக் கருவூலக அதிகாரிகளையும், சம்பளக் கணக்கு அதிகாரியையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, are the families of the pensioners also eligible for medical benefits. I think so far they have not been given. Will the Government take steps to extend to the families of pensioners also these facilities?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சில விதிமுறைகளுக்கு உட்பட்டு அவர்களுடைய குடும்பத்தாருக்கு இந்த வைத்தியவசதி உதவித் தொகை அளிக்கப்படுகிறது.